# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education
# Northern Province

## இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| **தரம் :- 11** | **வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்**<br>**Business studies and Accounting** | **நேரம் :-**<br>**1மணித்தியாலம்** |
| **சுட்டெண்:..............................** | **60 T I** | |

**கவனிக்க:**

- **எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

## பகுதி 1

**பின்வரும் சம்பவத்தினை வாசித்து 01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

சண்முகி உணவுத் தொழில்நுட்பத்துறை பட்டதாரியாவார். இவர் இயற்கை பழங்களை விற்பனை செய்யும் ‘‘பசுமை பழங்கள்’’ எனும் விற்பனை நிலையமொன்றினை பழச் செய்கை உற்பத்தியில் ஈடுபடும் தந்தையின் உதவியுடன் நடாத்தி வருகின்றார். இவர் பிரதேசத்தில் கிடைக்கின்ற இயற்கை பசளைகளைப் பயன்படுத்தி பழங்களை உற்பத்தி செய்வதுடன் அருகில் உள்ள சிற்றூண்டிச்சாலைக்கும், நுகர்வோருக்கும் விற்பனை செய்கின்றார். சண்முகி இயற்கையுடன் இணைந்து உற்பத்தியினை மேற்கொள்வதன் காரணமாக அவரது விற்பனை அதிகரித்து அதிக இலாபத்தை ஈட்டுவதற்கு முடிகிறது. இதனால் தனது வணிகத்தை விரிவுபடுத்துவதற்கு ஓர் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றார்.

1. இச்சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள தேவை மற்றும் விருப்பம் முறையே கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க.
   (1) பழங்கள் - உணவு (2) உணவு – பழங்கள்
   (3) பழங்கள் - சிற்றூண்டிச்சாலை (4) உணவு –நுகர்வோர்

2. ‘‘பசுமை பழங்கள்’’ வணிகத்தின் பிரதான பலமாக அமைவது
   (1) சண்முகி உணவுத் தொழில்நுட்ப பட்டதாரி
   (2) தந்தை பழச்செய்கையில் ஈடுபடல்.
   (3) அருகில் சிற்றூண்டிச்சாலை காணப்படல்.
   (4) இயற்கை பசளை பயன்படுத்திய பழங்களை விற்பனை செய்தல்.

3. ‘‘பசுமை பழங்கள்’’ வணிக அமைப்பானது
   (1) தனியாள் உடமை வணிகம் (2) பங்குடமை வணிகம்
   (3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி (4) உற்பத்தி வணிகம்

4. ‘‘பசுமை பழங்கள்’’ வணிக அமைப்பு பதிவு செய்வதுடன் தொடர்புடைய சட்டம்
   (1) 1918 ம் ஆண்டு 6ம் இலக்க வணிக பெயர் பதிவு கட்டளைச் சட்டம்
   (2) 2007 ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டம்
   (3) 1890 ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச் சட்டம்
   (4) 1972 ம் ஆண்டு 5 ம் இலக்க கூட்டுறவுச் சட்டம்

5. ‘‘பசுமை பழங்கள் ‘‘வணிகத்தினை கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக மாற்றுவதனால் கிடைக்கக்கூடிய நன்மையாக அமையாதது
   (1) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டிருத்தல்
   (2) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்படாதிருத்தல்
   (3) அதிக மூலதனம் திரட்டக் கூடியதாகவிருத்தல்
   (4) சட்ட ஆளுமை காணப்படல்

6. வணிகமொன்றுக்கு அச்சுறுத்தலாக அமையும் விடயமாக அமைவது
   (1) நுகர்வோர் வாழ்க்கைப் போக்கு மாற்றமடைதல்
   (2) புதிய நகரங்களின் தோற்றம்
   (3) புதிய போட்டியாளர் உருவாதல்.
   (4) அதிவேக வீதி நிர்மாணம்

7. பின்வருவனவற்றுள் சட்ட ஆளுமையுடைய வணிக அமைப்பாக கருதப்படுவது
   (1) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி , அரசகூட்டுத்தாபனம்
   (2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி , பங்குடமை
   (3) அரசகூட்டுத்தாபனம் , தனியுடமை
   (4) தனியுடமை , பங்குடமை

8. மொத்த, சில்லறை நடவடிக்கைகள் சில கீழே தரப்படுகின்றன.
   A. தர்மினி தனது மகளின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக 5kg கேக்கினைக் கொள்வனவு செய்தார்.
   B. கட்டடப் பொருட்களை விற்பனை செய்யும் அபிசேக் சீமெந்துப் பைக்கற்றுக்களைக் கொள்வனவு செய்தல்.
   C. கல்யாணி தனது பண்ணையிலுள்ள முட்டைகளைத் தனது அயலிலுள்ள குமரன் ஸ்ரோர்க்கு வழங்கல்.
   D. ரதி தனது மகளின் திருமண ஆடையினைத் தயாரிப்பதற்குத் தேவையான துணிகளைக் கொள்வனவு செய்தல்.

   மேலே தரப்பட்ட சம்பவங்களில் சில்லறை வியாபார நடவடிக்கைகளாவன,
   (1) A யும் C யும் (2) B யும் C யும்
   (3) A யும் D யும் (4) C யும் D யும்

9. வணிகர் மட்டுமன்றி எந்தவொரு நபரும் விரும்பியபோது பணத்தை வைப்பிலிடுவதற்கும் ,மீளப்பெறுவதற்கும் இயலுமான கணக்கு எது?
   (1) நடைமுறைக் கணக்கு (2) சேமிப்புக் கணக்கு
   (3) நிலையான வைப்புக் கணக்கு (4) சிறுவர் சேமிப்புக் கணக்கு

10. ராம் தனக்கிருந்த இருதய நோயினை தெரியப்படுத்தாது காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டார். அவர் மீறிய காப்புறுதி தத்துவம் யாது?
   (1) காப்புறுதி செய்தகு உரிமை (2) இழப்பீட்டு தத்துவம்
   (3) உயர்நம்பிக்கை தத்துவம் (4) பங்களிப்புத் தத்துவம்

11. மின் அஞ்சல் ஒரு
   (1) உள்வாரி, இலத்திரனியல் , வாய்மொழி தொடர்பாடல் முறை
   (2) உள்வாரி, இலத்திரனியல் அல்லாத ,எழுத்து மூலமான தொடர்பாடல்
   (3) வெளிவாரி, இலத்திரனியல், எழுத்து மூலமான தொடர்பாடல்
   (4) வெளிவாரி, இலத்திரனியல், வாய்மொழி தொடர்பாடல்

12. இலங்கையில் போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய சில சம்பவங்கள் A நிரலிலும் போக்குவரத்து மூலங்கள் B நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| A | B |
|---|---|
| 1. கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்தல் | A. வழி |
| 2. டீசல் ,பெற்றோல் ,மண்ணெண்னை விலை ஏற்றம் | B. ஊடகம் |
| 3. இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. | C. சக்தி |
| 4. கிராமப்புறங்களில் பாதைகள் செப்பனிடல் | D. தரிப்பிடம் |

A, B ஆகிய நிரல்களை இணைக்கும் போது சரியான விடையாக அமைவது
(1) D,C,B,A  ( 2) D,C,A,B  ( 3) A,D,C,B  (4) C,D,B,A

13. காசோலை ஒன்றின் காந்தமை நிரலில் காணப்படும் இலக்கங்கள் ஒழுங்கு முறையாக காட்டுவது.
   (1) கணக்கு இலக்கம், வங்கி இலக்கம் , வங்கி கிளை இலக்கம், காசோலை இலக்கம்
   (2) காசோலை இலக்கம், வங்கி இலக்கம், வங்கிகிளை இலக்கம், கணக்கு இலக்கம்
   (3) காசோலை இலக்கம் , கணக்கு இலக்கம் , வங்கி இலக்கம் , வங்கி கிளை இலக்கம்
   (4) காசோலை இலக்கம், வங்கிகிளைஇலக்கம் ,வங்கி இலக்கம், கணக்கு இலக்கம்

14. பாடசாலையில் வணிக தினத்தை முன்னிட்டு சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
   A- வணிக தினத்தை நடாத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை தீர்மானித்தல்.
   B- தேவையான நிதி மற்றும் வளங்களை ஒதுக்குதல்.
   C- மாணவர் குழுக்களுக்கான தலைவரை நியமித்தல்.
   D- வணிகதினம் நடைபெறும் சந்தர்ப்பத்தில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதா என்பதை தேடி சீர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

   மேற்குறிப்பிட்ட சம்பவத்தில் குறிப்பிட்ட முகாமைத்துவ கருமங்களை ஒழுங்குமுறையாக காட்டும் விடைத்தொகுதி
   (1) திட்டமிடல், நெறிப்படுத்தல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல்.
   (2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல்
   (3) திட்டமிடல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல், ஒழுங்கமைத்தல்
   (4) ஒழுங்கமைத்தல், திட்டமிடல், கட்டுப்படுத்தல்,நெறிப்படுத்தல்.

15. வணிகமொன்று க.பொ.த(சா.த) மாணவர்களுக்கு பரீட்சை மாதிரி வினாத்தாள் அடங்கிய பயிற்சி புத்தகமொன்றினை அச்சிட்டு விற்பனை செய்கின்றது. .இங்கு குறிப்பிடப்படும் பயிற்சிப்புத்தகம் சந்தைப்படுத்தல் கலவையில் எதனைக் குறித்து நிற்கின்றது.
   (1) விலை  (2) இடம்  (3) உற்பத்திப் பொருள்  (4) மேம்படுத்தல்

16. சந்தைப்படுத்தல் கலவையில் உள்ளடங்கும் தரம், கூறுகள், வடிவம் , பொதியிடல் ஆகிய உருப்படிகள் குறிப்பது
   (1) உற்பத்திப் பொருள்  (2) விலை  (3) இடம்  (4) மேம்படுத்தல்

17. 4Ps என அழைக்கப்படுபவை
   (1) உற்பத்திக் கலவை  (2) சந்தைப்படுத்தல் கலவை
   (3) முகாமைக் கருமங்கள்  (4) மேம்படுத்தல் கலவை

18. A- நிகழ்கால கடப்பாட்டை உடையது

B- எதிர்கால பொருளாதார நலன்களை வெளியேற்ற கூடியது

C- கடந்த கால கொடுக்கல் வாங்கல்களால் தோற்றம் பெற்றது

மேலே உள்ள பண்புகள் குறித்து நிற்கும் கணக்கீட்டுக் கூறு யாது?

(1) சொத்து (2) பொறுப்பு (3) வருமானம் (4) செலவினம்

19. அதிகரித்தல் வரவு, குறைதல் செலவு எனும் இரட்டைப் பதிவு தத்துவம் பொருந்தும் கணக்கு வகை.

(1) சொத்துக் கணக்காகும். (2) பொறுப்புக் கணக்காகும்.
(3) உரிமைக் கணக்காகும். (4) வருமானக் கணக்காகும்.

20. கடன்பட்டோரிடம் ரூ 1000 கழிவு கொடுத்து ரூ 9000 காசாக பெறப்படின் அதனை சரியாக காட்டும் விடை?

| | சொத்து | = | உரிமை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | -10000 | | -1000 | | +9000 |
| (2) | -10000 | | -1000 | | +11000 |
| (3) | +9000 | | -1000 | | |
| | -10000 | | | | |
| (4) | -2000 | | -2000 | | |

21. உரிமையாளர் தனது சொந்தப் பணத்தில் கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசுக்கான இரட்டைப்பதிவு யாது?

(1) காசுக் கணக்கு வரவு, மூலதனக் கணக்கு செலவு
(2) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு, மூலதனக் கணக்கு செலவு
(3) மூலதனக் கணக்கு வரவு, கடன்கொடுத்தோர் கணக்கு செலவு
(4) மூலதனக் கணக்கு வரவு, காசுக் கணக்கு செலவு

22. காசுக் கொடுப்பனவுக்கான மூல ஆவணம் யாது?

(1) பற்றுச்சீட்டு (2) கைச்சாத்து (3) பட்டியல் (4) வைப்புச்சீட்டு

❖ ABC வணிகத்தின் தை மாதத்திற்கான சில்லறைக் காசு மீதி ரூ 450 ஆகும். அவ்வணிகத்தின் மார்கழி மாதத்திற்கான செலவினம் ரூ 2050 ஆகும். தை மாதத்தில் இருந்து சில்லறை கட்டுநிதி ரூ 500 அதிகரிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

❖ 23, 24 ம் வினாக்களுக்கான விடையினை மேற்கூறப்பட்ட தரவுகளில் இருந்து கணிக்குக.

23. ABC வணிகத்தின் மார்கழி மாதத்திற்கான வசக்கட்டு தொகை யாது?

(1) ரூ 2500 (2) ரூ 2050 (3) 1600 (4) ரூ 2000

24. ABC வணிகத்தின் தை மாதத்திற்கான மீள் நிரப்பல் தொகை யாது?

(1) ரூ 3000 (2) ரூ 450 (3) ரூ 2050 (4) ரூ 2550

25. கடன்பட்டோரிடம் பெற்ற காசோலை வங்கியால் மறுக்கப்படின் இதற்கான இரட்டைப்பதிவு யாது?

(1) கடன்பட்டோர் கணக்கு வரவு, வங்கிக்கணக்கு செலவு
(2) வங்கிக்கணக்கு வரவு, காசுக் கணக்கு செலவு
(3) மூலதன கணக்கு வரவு, கடன்கொடுத்தோர் கணக்கு செலவு
(4) மூலதன கணக்கு வரவு, காசுக் கணக்கு செலவு

26. காசேட்டின்படி வங்கி மீதி ரூ 9000 வங்கிக் கூற்றின் படி மீதி ரூ 6000 வேறுபாட்டைத் தோற்றுவித்த காசோலை

(1) மாற்றப்படாத காசோலை (2) நேரடி வைப்புச் செய்த காசோலை
(3) வசூலிக்கப்படாத காசோலை (4) மறுக்கப்பட்ட காசோலை

27. கொள்வனவு நாளேடு/ நாட்குறிப்பு …………………… ஆகும்.
(1) கணக்கு (2) பேரேடு (3) கணக்கீட்டுக்கூறு (4) மூல ஏடு

28. பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்ய முடியாத கொடுக்கல் வாங்கல்
(1) தளபாட நிறுவனம் தனது முகாமையாளர் பாவனைக்கு கடனுக்கு கதிரையினைக் கொள்வனவு செய்தல்
(2) உரிமையாளரின் பொருள் பற்று
(3) திருத்த நாட்குறிப்பு பதிவு
(4) தளபாட நிறுவனம் கடனுக்கு தளபாடங்களை கொள்வனவு செய்தல்

29. வங்கி கூற்றில் வரவு மீதி காணப்படின் அது?
(1) ஒரு சொத்து ஆகும். (2) ஒரு உரிமையாகும்.
(3) ஒரு பொறுப்பு ஆகும். (4) ஒரு செலவினம் ஆகும்.

30. விசேட நாட்குறிப்புக்களாக கருதப்பட முடியாதது?
(1) விற்பனை நாளேடு (2) காசு கணக்கு
(3) கொள்வனவு நாளேடு (4) பொது நாட்குறிப்பேடு

31. பரீட்சை மீதியின் வரவு நிரல் ரூ 50000 ரூபாவினையும் செலவு நிரல் 47000 ரூபாவினையும் காட்டியது. இதற்கான கணக்கீட்டு வழு யாது?
(1) வாடகை செலுத்தியது ரூ 3000 ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை
(2) வாடகை கணக்கின் மீதி ரூ 3000 பரீட்சை மீதிக்கு மாற்றப்படவில்லை
(3) வாடகை செலுத்தியது ரூ 3000 இரு தடவை பதிவு செய்யப்பட்டது
(4) வாடகை செலுத்தியது ரூ 3000 வாடகை கணக்கில் மட்டும் பதிவு செய்யப்பட்டது

32. ஒரு பரீட்சை மீதியானது சமப்படும் போது எடுக்கப்படக் கூடிய தீர்மானமாக அமைவது
(1) அனைத்து இரட்டைப் பதிவுகளும் சரியாக உள்ளது
(2) எண்கணித ரீதியாக இரட்டைப்பதிவு சரியாக உள்ளது
(3) முடிவுக் கணக்குகளை தயாரிக்க முடியும் என்பதை
(4) முடிவுக் கணக்ககளை தயாரிக்க முடியாது என்பதை

33. தொங்கல் கணக்கு என்பது
(1) சொத்து கணக்கு (2) தற்காலிக கணக்கு
(3) பொறுப்பு கணக்கு (4) உரிமை கணக்கு

34. 01.07.2019 இல் மோட்டார் வாகனம் ஒன்று 600 000யில் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் எஞ்சிய பெறுமதி 100 000 பயன்தரு ஆயுட்காலம் 10 வருடம் எனின் 31.12.2021 இல் அதன் திரண்ட தேய்வு யாது?
(1) ரூ 150 000 (2) ரூ 50 000 (3) ரூ 125 000 (4) ரூ 100 000

35 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு பின்வரும் தரவுகளை கொண்டு விடையளிக்க.
கமல் வணிகத்தின் 31.12.2021 ல் முடிவடைந்த ஆண்டுக்கான தரவுகள் வருமாறு

| | ரூபா |
|---|---|
| கொள்வனவு | 100 000 |
| வாடகை | 6 000 |
| பெற்ற கழிவு | 5 000 |
| விற்பனை | 300 000 |
| காப்புறுதி | 7 000 |
| தளபாடம் | 100 000 |
| மோட்டார்வாகனம் | 300 000 |
| வங்கிகடன் (10%) | 100 000 |
| கடன்பட்டோர் | 50 000 |
| அறவிடமுடியாகடன் | 7 000 |
| ஏனைய செலவு | 9 000 |
| 01.01.2021 இருப்பு | 10 000 |
| உட்சுமைக்கூலி | 9 000 |
| மூலதனம் | 350 000 |
| வங்கிமேலதிகப்பற்று | 6 000 |
| நிலையான வைப்பு (15%) | 150 000 |

✓ **மேலதிக தகவல்கள்**

- மாதாந்த வாடகை ரூ 1500
- அறவிடமுடியாத கடனாக மேலும் ரூ 3000 பதிவளிக்குக
- இன்னும் ரூ 1000 காப்புறுதிக் கட்டணமாக செலுத்த வேண்டியுள்ளது
- 31.12.2021 இருப்பு ரூ 9000
- நடைமுறையல்லாச் சொத்துக்கு 10% தேய்விடுக.

35. வணிகத்தின் விற்பனைக்கிரயம் யாது?
(1) ரூ 119 000 (2) ரூ 110 000 (3) ரூ 100 000 (4) ரூ 90 000

36. வணிகத்தின் மொத்த இலாபம் யாது?
(1) ரூ 180 000 (2) ரூ 190 000 (3) ரூ 120 000 (4) ரூ 24 000

37. வணிகத்தின் நிதிநிலைமை கூற்றில் காட்டப்படும் வாடகை பெறுமதி?
(1) ரூ 18 000 (2) ரூ 6 000 (3) ரூ 12 000 (4) ரூ 240 000

38. வணிகத்தின் கடன்பட்டோரின் தேறிய பெறுமதி யாது?
(1) ரூ 40 000 (2) ரூ 43 000 (3) ரூ 47 000 (4) ரூ 53 000

39. வணிகத்தின் தேறிய இலாபம் யாது?
(1) ரூ 145 000 (2) ரூ 210 000 (3) ரூ 122 500 (4) ரூ 65 000

40. வணிகத்தின் உரிமையாண்மையைக் கணிக்குக
(1) ரூ 350 000 (2) ரூ 445 000 (3) ரூ 495 000 (4) ரூ 472 500